தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(10.05.2023 முதல் 14.05.2023)

அறிக்கைஎண்: 36/2023 தேதி: 09.05.2023

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 - 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (10.05.2023 முதல் 14.05.2023).

| கடந்தவாரவானிலை (04.05.2023 முதல் 08.05.2023) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (10.05.2023 முதல் 14.05.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 04/05 | நாள்-2 05/05 | நாள்-3 06/05 | நாள்-4 07/05 | நாள்-5 08/05 | தேதி | நாள்-1 10/05 | நாள்-2 11/05 | நாள்-3 12/05 | நாள்-4 13/05 | நாள்-5 14/05 |
| 20.7 | 0.8 | 0.0 | 14.3 | 10.6 | மழை (மி.மீ.) | 2 | 0 | 0 | 0 | 0 |
| 33 | 35 | 33 | 33 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 37 | 38 | 38 |
| 25 | 26 | 27 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 28 | 28 | 28 |
| 6 | 5 | 5 | 6 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 5 | 5 | 4 | 4 |
| 81-71 | 76-68 | 78-72 | 83-69 | 87-64 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 80-40 | 70-40 | 70-40 | 70-40 |
| 4 | 5 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 4 | 10 | 14 | 16 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். 10.05.2023 அன்று குறைந்த தூரல் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 – 38 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழைக்கு முன்னால் கோடை உழவு செய்து, மழை நீரை மண்ணில் சேமிக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும் |
| நெல் | நாற்றாங்கால் | கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும். |
| பயறுவகை பயிர்கள் | அறுவடை | அறுவடை செய்த பயிர்களை எதிர்பார்க்கப்படும் மழையில் இருந்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | மழையினால் மாடு கட்டும் இடங்களில் ஈரம் அதிகரித்து மடி நோய் ஏற்ப்படும் வாய்ப்புள்ளது. எனவே மாட்டு கொட்டகைகளை உலர்வாகவும், சுண்ணாம்பு கிருமிநாசினி தெளித்து மாடுகளை பாதுகாக்கவும். |

## குறுஞ்செய்தி

குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 மற்றும் ஆடுதுறை 47 விதைகளை தேர்ந்தெடுக்கவும்

**இயக்குநர்**